ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ   அதிவிசேஷமானது

අංක 1658/35 - 2010 ජූනි 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.06.17
*1658/35 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : எல்டீ/05/2008/எப்எச்/134.
எனது இல. : 4/6/1-1/734ஏ/03.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில், 734 ஏ – குடாபயாகல தெற்கு கிராம சேவையாளர் பிரிவின் நில அளவை அதிகாரியின் இல. மு. பி. க. 4183 வரைபடத்தின் காணித் துண்டு இல. 01.

01. **துண்டு இல. 01**
காணியின் பெயர் : சமரப்பு வத்த ; விபரம் : கடற்றொழில் மத்திய நிலையம் அமைப்பதற்கு காணி சுவீகரித்தல் ; உரிமை கோருபவர் : திருமதி என் போயிஸ் பிரேன்க்லின் பர்ல் பேன்க் ஸ்டேட், அம்பதண்டேகம, பண்டாரவெல ; விஸ்தீரணம் : 0.0253

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2010 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பேருவளை பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2010.08.18 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விமல் குணதுங்க,
பிரதேச செயலாளர்,
பேருவளை.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
பேருவளை,
2010.06.07.

07 – 135

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

கம்பஹா மாவட்டத்தில், மீரிகம பிரதேச செயலாளர் பிரிவில், உடுகஹ பற்று தெபஹர கிராமத்தில் அமைந்துள்ள கம்பஹ நில அளவை அதிகாரியின் வரைபடத்தில் மு. பி. கம். 3726 இல் காணித் துண்டுகள் இல. 01, 02, 03 ஆகக் காட்டப்பட்டுள்ள 17.6720 ஹெக்டயார்ஸ் விஸ்தீரணமுடைய மெடிஹக்க வத்த எனும் காணி :

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு மீரிகம பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2010ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். என். குமாரி,
பிரதேச செயலாளர்,
மீரிகம.

பிரதேச செயலகம்,
மீரிகம,
2010.06.09.

07 – 136

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.